TNKR080006352020

**தீர்ப்பாய நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ.,பி.எல்.,**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாய நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ஆம் தேதி வியாழக்கிழமை**

**MCOP No.249/2020**

**CNR No.TNKR08-000635-2020**

A.செல்வராஜ், வயது 43, த/பெ.ஆலிகவுண்டர்
ஆர்.கவுண்டனூர், நல்லூர் அஞ்சல்,
குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம். . . . மனுதாரர்

/எதிர்/

1. R.பாலமுருகன், த/பெ.ரெங்கன்
க.எண்.2/2, மேல்நந்தவனக்காடு,
நச்சலூர், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம்.
2. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
டிவிஷனல் ஆபீஸ், KRT பில்டிங், கண்டோன்மெண்ட்,
திருச்சி–1. . . . எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் சேதம் அடைந்ததற்காக மோட்டார் வாகனச்சட்டம் பிரிவு 140, 165, 166 மற்றும் 167–ன் கீழ் ரூ.1,00,000/–த்தை எதிர்மனுதாரர்கள் வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 08.10.2020 |
| இறுதி விசாரணை செய்த நாள் | : | 10.03.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 16.04.2026 |
| மனுதாரருக்காக | : | திரு.R.கார்த்திகேயன் – வழக்கறிஞர் |

எதிர்மனுதாரர்கள் : நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்

1) **மனுவின் சுருக்கம் :–**

கடந்த 12.08.2020–ம் தேதி அன்று 2.30 மணியளவில் மனுதாரருக்கு சொந்தமான TN 45 AV 1935 என்ற பதிவெண்ட கொண்ட இருசக்கர வாகனத்தை ஒரு இளவரசன் என்பவர் ஓட்ட, அவருடைய தகப்பனார் வையாபுரி என்பவர் மேற்படி இருசக்கர வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு திருச்சி –நச்சலூர் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்த பொழுது, முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி, மேற்படி இளவரசன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால், மேற்படி இருசக்கர வாகனம் மிகவும் சேதம் அடைந்து விட்டது. மேற்படி விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியே காரணம் ஆவார். முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் மீது குளித்தலை காவல் துறையினர் குற்ற எண் 676/2020, இ.த.ச பிரிவுகள் 279, 337–ன் கீழ் வழக்கு பதிவு செய்து நிலுவையில் இருந்து வருகிறது. முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தினை இரண்டாவது எதிர்மனுதாரிடம் காப்பீடு செய்துள்ளதால், மேற்படி மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் சேதம் அடைந்ததற்காக இழப்பீட்டுத் தொகையினை எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

3) **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் :–**

**(அ)** இந்த வாகன விபத்தானது TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றதா?

**(ஆ)** மனுதாரர் இழப்பீட்டுத்தொகை பெற உரியவரா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கதா?

**(இ)** எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவர்களா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**4)** மனுதாரர் தரப்பில், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) பிரச்சினை ஒன்றிற்கான தீர்வு :-**

**(அ)** *இந்த வாகன விபத்தானது TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட வாகன ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடைபெற்றதா?*

ம.சா.1 அவரது முதல் விசாரணையில், கடந்த 12.08.2020-ம் தேதி அன்று 2.30 மணியளவில் மனுதாரருக்கு சொந்தமான TN 45 AV 1935 என்ற பதிவெண்ட கொண்ட இருசக்கர வாகனத்தை ஒரு இளவரசன் என்பவர் ஓட்ட, அவருடைய தகப்பனார் வையாபுரி என்பவர் மேற்படி இருசக்கர வாகனத்தில் பின் அமர்ந்து கொண்டு திருச்சி – நச்சலூர் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்த பொழுது, முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி, மேற்படி இளவரசன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால், மேற்படி இருசக்கர வாகனம் மிகவும் சேதம் அடைந்து விட்டது என்றும், மேற்படி விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியே காரணம் என்றும், முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் மீது குளித்தலை காவல் துறையினர் குற்ற எண் 676/2020, இ.த.ச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தினை இரண்டாவது எதிர்மனுதாரிடம் காப்பீடு செய்துள்ளதால், மேற்படி இருசக்கர வாகனத்திற்கான இழப்பீட்டுத் தொகையினை எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். மேற்படி சம்பவம் குறித்து முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் மீது குளித்தலை காவல் துறையினர் குற்ற எண் 676/2020, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 279 மற்றும் 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்கின்ற

சங்கதியை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.1 ஆவணத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி, எதிருரை தாக்கல் செய்யாதது அவர்களுக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது. முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்கின்ற சங்கதியை ம.சா.1 சாட்சியத்தின் வாயிலாகவும், மனுதாரர் தரப்பு ஆவணங்களின் வாயிலாகவும் மனுதாரர் நிரூபணம் செய்துள்ளார். இவ்வாறாக, பிரச்சினை ஒன்றிற்கு விடை காணப்படுகிறது.

**6) பிரச்சினை இரண்டிற்கான தீர்வு :-**

*(ஆ) மனுதாரர் இழப்பீட்டுத்தொகை பெற உரியவரா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கதா?*

மனுதாரருக்கு சொந்தமான TN 45 AV 1935 என்ற பதிவெண்ட கொண்ட இருசக்கர வாகனத்தை சேதம் அடைந்துள்ளது என்கின்ற சங்கதியை மனுதாரர் ஆவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளார். மனுதாரர் இழப்பீடாக ரூ.1,00,000/-ம் கோரியுள்ள போதிலும், மேற்படி வாகனத்திற்கு ரூ.1,00,000/-க்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்கின்ற சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.2 ஆவணத்தில் அடிப்படையில் மனுதாரரின் வாகனத்திற்கு ரூ.9,334/- செலவாகியுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, மனுதாரருக்கு சொந்தமான TN 45 AV 1935 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் சேதம் அடைந்ததற்காக இழப்பீடாக ரூ.10,000/- கிடைக்கத்தக்கது. இவ்வாறாக, பிரச்சினை இரண்டிற்கு விடை காணப்படுகிறது.

**7) பிரச்சினை மூன்றிற்கான தீர்வு :-**

*(இ) எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவர்களா? ஆம் எனில், எவ்வளவு தொகை அவருக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது?*

முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என பிரச்சினை ஒன்றிற்கு விடை காணப்பட்டுள்ள நிலையில், மேற்படி TN 47 BZ 6547 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரானது இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் காப்பீட்டு செய்யப்பட்டுள்ளது என்கின்ற சங்கதியை மனுதாரர் தரப்பில் கடந்த 05.02.2026–ம் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்ட Insurance Policy–ன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே, காப்பீட்டாளர் என்கின்ற கோதாவில் மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் சேதம் அடைந்ததற்காக இழப்பீட்டுத் தொகையை இரண்டாவது எதிர்மனுதாரரே செலுத்த கடமைப்பட்டவர். இவ்வாறாக, பிரச்சினை மூன்றிற்கு விடை காணப்படுகிறது.

8) **முடிவாக,**

**(அ)** மனுதாரரின் மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** இரண்டாவது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக **ரூ.10,000/–ஐ** மனுதாரர் மனு தாக்கல் செய்த நாள் முதல் தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5 சதவீத வட்டி மற்றும் செலவு தொகையுடன் கொடுக்க வேண்டும் என்றும்,

**(இ)** மாண்புமிகு உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு எண்.4299/2025 நாள் : 18.03.2025–ல் வழங்கிய தீர்ப்பின் படியும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ROC No.55584/2025/Sct Dated : 02.07.2025–ல் அனுப்பிய சுற்றறிக்கையின் படியும் மேற்படி தொகையை இரண்டாவது எதிர்மனுதாரர் கீழ்க்கண்ட வங்கி கணக்கில்,

| மனுதாரர் | Amount | Account Number | Bank | Branch | IFSC Code | MICR Code |
|---|---|---|---|---|---|---|
| Selvaraju.A | ரூ.10,000/– | 83121011 0002060 | Bank of India | Pettavaithalai | BKID0008312 | 620013007 |

உத்தரவு பிறப்பித்த ஒரு மாத காலத்திற்குள் வைப்பீடு செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையை வைப்பீடு செய்யப்பட்ட

விபரத்தை இரண்டாவது எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு குறிப்பாணை மூலம் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**(ஈ)** வழக்கறிஞர் கட்டணமாக ரூ.1,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

**(உ)** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண்.Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s.Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr.Ayyanar and others நாள் : 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவின் படி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே, தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

| **செலவுத் தொகை விபரம்** | **ரூ.** | **மனுதாரர் தரப்பில்** |
|---|---|---|
| மனுவிற்கான நீதிமன்ற கட்டணம் | **ரூ.** | 373 |
| வக்காலத்து | **ரூ.** | 10 |
| வழக்கறிஞர் ஊதியம் | **ரூ.** | 1000 |
| **மொத்தம்** | **ரூ.** | **1383** |

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN Date: 2026.04.16 16:24:51 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி:**

ம.சா.1 – செல்வராஜ் (மனுதாரர்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | Repair Cash Bill |
| ம.சா.ஆ.3 | R.C.Book நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.16 16:24:46 +0530

தீர்ப்பாய நீதிபதி,
குளித்தலை.